UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2015 ஆகஸ்ட்

# TAMIL I / தமிழ் I - ( TG I)

## தமிழ்மொழி வரலாறும் இலக்கண மரபுகளும்

(மூன்று மணித்தியாலம்)

---

**இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன**

**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்களையேனும் தெரிந்து**

**எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக**

**(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)**

## பகுதி 1

1. தமிழ்மொழி வரலாற்றை அறிந்துகொள்வதற்கு உதவும் எழுத்துச் சான்றுகளை வகைப்படுத்தி விளக்குக.

2. சொல் இறுதியில் வரும் எழுத்துக்கள் பற்றித் தமிழ் இலக்கண நூல்கள் கூறுவனவற்றை விளக்கி, தற்காலத் தமிழில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்க.

3. ஐந்தாம், ஆறாம் வேற்றுமைகள் பற்றி நன்னூல் கூறுவனவற்றைத் தெளிவுபடுத்தி, இவ்வேற்றுமை உருபுகளிலும் பொருளிலும் தற்காலத் தமிழில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விளக்குக.

4. சங்க காலத்திலிருந்து இன்றுவரை தமிழில் பிறமொழிச் சொற்கள் வந்து கலந்த வரலாற்றுச் சூழலைத் தெளிவுபடுத்தி, பிறமொழிக் கலப்பினால் தமிழில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விளக்குக.

## பகுதி 2

5. இலக்கண மரபு என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? சார்பெழுத்துப் பற்றிய கொள்கையில் தொல்காப்பியரும் நன்னூலாசிரியரும் எவ்வாறு வேறுபடுகின்றனர் என்பதை விளக்குக.

6. "தொல்காப்பியம் தோற்றுவித்த இலக்கண மரபிலிருந்து வீரசோழியம் வேறுபடுகின்றது" இக்கூற்றைத் தெளிவுபடுத்துக.

7. தமிழ் இலக்கண மரபில் பால்பாகுபாடுபற்றி விளக்கித், தற்காலத் தமிழைப் பொறுத்தவரை ஐம்பால் பாகுபாடு பொருந்துமா என்பதை ஆராய்க.

8. ஐரோப்பியர் காலத்தில் தமிழ் இலக்கண வளர்ச்சி பற்றிக் கருத்துரை வழங்குக.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2015 ஆகஸ்ட்

# TAMIL - II / தமிழ் - II ( TG - II)

## குறிப்பிட்ட பாட நூல்கள்

(மூன்று மணித்தியாலம்)

---

இவ்வினாத்தாளில் எல்லாமாக 08 வினாக்கள் உள்ளன

**முதலாம்** பகுதியிலுள்ள வினாவுக்கும் **இரண்டாம்** பகுதியிலுள்ள

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கும்

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

## பகுதி I

1. மேல்வரும் பாடல்களின் இலக்கியச் சிறப்பினை விளக்குக.

(அ) கோழிலை வாழைக் கோள் முதிர் பெருங்குலை
ஊழுறு தீம் கனி, உண்ணுநர்த் தடுத்த
சாரற் பலவின் களையொடு, ஊழ் படு
பாறை நெடுஞ் சுனை, விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறி வளர் சாந்தம் ஏறல் செல்லாது,
நறு வீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்
குறியா இன்பம், எளிதின் நின் மலைப்
பல்வேறு விலங்கும், எய்தும் நாட !

குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய?
வெறுத்த ஏஎர், வேய் புரை பணைத் தோள்,
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு,
இவளும், இனையள் ஆயின், தந்தை
அருங் கடிக் காவலர் சோர் பதன் ஒற்றி,
வேங்கையும் ஒள் இணர் விரிந்தன;
நெடு வெண் திங்களும் ஊர் கொண்டன்றே.

(ஆ) வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறாஅது
இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப,
ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகைக்
கடந்து அடு தானைச் சேர லாதனை

யாங்கனம் ஒத்தியோ! வீங்குசெலல் மண்டிலம்
பொழுது என வரைதி, புறங்கொடுத்து இறத்தி;
மாறிவருதி; மலை மறைந்து ஒளித்தி;
அகல்இரு விசும்பி னானும்
பகல்விளங் குதியால், பல்கதிர் விரித்தே!

## பகுதி II

2. பாத்திரக் கூற்றுக்கள் வாயிலாக அகத்திணை அம்சங்கள் அகநானூற்றில் இடம்பெறுமாற்றை விபரிக்குக.

3. அரசுகளினது போர் ஒழுக்கச் சித்திரிப்பில் பாடாண்திணைப்பாடல்களின் வகிபாகம் பற்றிப் புறநானூற்றுப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

4. மன்னனை மையமாகக் கொண்டு திருவள்ளுவர் தெரிவிக்கும் அரசியல் கருத்துக்களை விளக்குக.

5. சங்ககால அகமரபின் தொடர்ச்சியாக ஆண்டாள் பாடல்கள் அமையுமாற்றை விபரிக்குக.

6. பெரிய புராணத்தில் கண்ணப்பநாயனார் கதையினூடாக அடிநிலை மக்களையும் அவர் தம் வாழ்வியலையும் சேக்கிழார் சித்திரிக்குமாற்றிலுள்ள சிறப்புகளை விபரிக்குக.

7. நவீன தமிழ்க் காவியத்தின் பண்புகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கேற்ப குயிற்பாட்டு அமையுமாற்றை விளக்குக.

அல்லது

ஆங்கில காலனித்துவ பாரதத்தின் சரிதையாகவும் பாரதியின் சுயசரிதை அமைகிறது.'' அலசுக.

8. இலங்கையர்கோனின் வெள்ளிப்பாதசரம் சிறுகதைத் தொகுப்பில் 'பெண் சித்திரிப்பு' பற்றிக் கருத்துரை வழங்குக.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்
දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015
பொதுக்கலைமாணி பரீட்சை (வெளிவாரி)- 2015 ஆகஸ்ட்

# TAMIL - III / தமிழ் - III ( TG III)

## சோழர்காலம் முதல் நவீனகாலம் வரையிலான தமிழ் இலக்கிய வரலாறும் இலக்கியக்கோட்பாடுகளும்

நேரம் : மூன்று மணித்தியாலம்

---

இவ்வினாப் பத்திரத்தில் எல்லாமாகப் **பத்து**(10) வினாக்கள் உள்ளன

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்களையேனும் தெரிந்து

எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக

(எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்)

## பகுதி I

01. "சோழர் காலச் சிற்றிலக்கியங்கள் அரசர் புகழை பல்வேறு இலக்கிய ஊடகங்கள் வழி வெளிப்படுத்திய போதும், அவற்றின் பின்புலமாக அமைந்தவை அரசுகளின் தனித்த விருப்பங்களேயாகும்." அலசுக.

02. "சோழர்காலத்தின் தொடர்ச்சியினையும், வளர்ச்சியினையும், தனக்கேயுரிய தனித்துவத்தினையும் கொண்டதாக விஜயநகர நாயக்கர் காலம் விளங்குகிறது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

03. "ஐரோப்பியர் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றினைப் புதிய திசைகளை நோக்கிச் செலுத்தியது." கருத்துரை வழங்குக.

04. தமிழில் சிறுகதை இலக்கியத்தின் தோற்றப்பின்னணியினைத் தெளிவுபடுத்தி, ஆரம்பகாலத் தமிழ்ச் சிறுகதைகள் பற்றி விளக்குக.

05. பின்வருவோருள் யாரேனும் ஒருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றி பங்களிப்பினை மதிப்பிடுக.

(அ) கம்பர்

(ஆ) அருணகிரிநாதர்

(இ) பாரதிதாசன்

(ஈ) அகிலன்

## பகுதி II

06. திறனாய்வில் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய முக்கிய அம்சங்கள் பற்றிக் கருத்து வழங்குக.

07. "சிறந்த திறனாய்வாளன் இலக்கியவாதியையும், வாசகனையும் நெறிப்படுத்துபவன மாத்திரமன்றி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவுபவனாகவும் விளங்குவான்." ஆராய்க.

08. அறவியல் கொள்கையையும், சமுதாயவியல் கொள்கையையும் ஒப்பிடுக.

09. நீர் படித்த கவிதைத் தொகுதி ஒன்றினைத் திறனாய்வு நோக்கில் மதிப்பிடுக.

10. பின்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

நாளை வருவான் ஒரு மனிதன்
ஞாலத் திசைகள் கோலமிட
நாளை வருவான் ஒரு மனிதன்!

உள்ளத் தெளிவின் நில்வினிலே
ஒளிரும் நினைவாம் சுடரினிலே
வெள்ளப் புனலின் கலப்பினிலே
விடியற் பரிதி உருவினிலே...
நாளை வருவான் ஒரு மனிதன்!

காலச் சுழலின் சுழிகளிலே
கலந்து சுழலும் மேதையரின்
கோலக் கனவின் கருக்குழியில்
கோடிக் காலம் தவமிருந்தோன்
நாளை வருவான் ஒரு மனிதன்!

மாநி லத்துக் கழனியினை
மாற்றி யுழக்கி வரப்பிட்டு
ஏணி பெற்ற வாழ்க்கையினை
எருவிட்டாக்கும் நல்லுழவன்...
நாளை வருவான் ஒரு மனிதன்!

சாதி ஒன்றாய் நிறமொன்றாய்
சமயம் ஒன்றாய் மொழியொன்றாய்
நீதி ஒன்றாய் நிலையொன்றாய்
நிறைகண் டாளும் விஞ்ஞானி...
நாளை வருவான் ஒரு மனிதன்!

வானக் கூரைப் பந்தலின் கீழ்
வையகத்துப் பெருமனையில்
மானுடத்தின் பிள்ளைகளை
மருவி மகவாய் விருந்தோம்ப...
நாளை வருவான் ஒரு மனிதன்!